# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## OCC 4103 தமிழில் காப்பியங்கள்

நேரம்: 3 மணித்தியாலங்கள்

**பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.**

---

1. அ. 'காப்பியம்' என்றால் என்ன என்பது பற்றிச் சுருக்கமாக விளக்குக.

   ஆ. காப்பியங்கள் பற்றி மேலைத்தேய, கீழைத்தேய அறிஞர்களது கருத்துக்களைத் தொகுத்துத் தருக.

2. தண்டியலங்காரம் கூறும் காப்பிய இலக்கணத்தை அடிப்படையாகக்கொண்டு தமிழ்க் காப்பியங்களைப் பகுப்பதில் உள்ள சிக்கல்களை ஆராய்க.

3. சிலப்பதிகாரத்தின் அமைப்பினை எடுத்துக்கூறி அதன் இலக்கியப் பண்புகளை விளக்குக.

4. பெரியபுராணம் ஏனைய காப்பியங்களிலிருந்து வேறுபடுமாற்றை விளக்குக.

5. அ. கம்பன் இராமாயணக் கதையை நகர்த்தியுள்ள முறையைச் சுருக்கமாக எடுத்துக் கூறுக.

   ஆ. கம்பராமாயணப் பாத்திரப் படைப்பில் அவர் கையாண்டுள்ள உத்திகளை ஆராய்க.

6. அ. சீறாப்புராணத்தின் அமைப்பினைச் சுருக்கமாக விளக்குக.

   ஆ. இக்காப்பியத்தில் உமறுப்புலவர் உவமை நயம், வர்ணனை ஆகிய அம்சங்களைச் சிறப்பாகக் கையாண்டுள்ள முறைமையை மதிப்பிடுக.